# 15 எனது ஊர்

## செயற்பாடு 1

**படங்களைப் பார்ப்போம். கலந்துரையாடுவோம்.**













எமது நாட்டில் பல தீவுகள் உள்ளன. அவற்றில் நெடுந்தீவும் ஒன்றாகும். இதனை ‘டெல்ப்’ என்று கூறுவார்கள். இங்கே பல புதுமைகள் உள்ளன.

## செயற்பாடு 2 (40)

**ஆசிரியரின் உதவியுடன் உரையாடலைச் செவிமடுப்போம். விடை அளிப்போம்.**

(பருந்து கிளியைத் துரத்திக்கொண்டு சென்றது.களைத்துப் போன கிளி தனது ஊர் மதில்மேல் உட்கார்ந்தது.)

● கிளி ▲ பருந்து

● பருந்தாரே வருக, வருக வணக்கம். என்ன யோசிக்கிறீர்? என்னை இனி ஒன்றும் செய்ய முடியாது. இது எனது ஊர். இங்கு வருபவர்கள் எனது நண்பர்கள். நாங்கள் அவர்களை வருக வருக என வரவேற்போம்.

▲ (பருந்து கிளியின் பேச்சில் மயங்கியது.) நான் உன்னைப் பிடித்து உண்பதற்குத் துரத்தினேன். நீயோ என்னை வரவேற்கிறாய். நல்லது கிளியாரே. இது என்ன புதுவிதமான மதிலாக இருக்கிறதே.

● இதுதான் எனது ஊரில் உள்ள புதுமை.

▲ எனது ஊர், எனது ஊர் என்று பெருமையாகச் சொல்கிறீர். உமது ஊரின் பெயர் என்ன?

● எனது ஊர் நெடுந்தீவு. இது அழகான சிறிய ஊர்.

▲ தீவு என்றால் என்ன?

● நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நிலப்பகுதி தீவு.




▲ இப்படி வேறு தீவுகளும் உள்ளனவா?

● ஆம் பருந்தாரே! அனலை தீவு, நயினாதீவு, எழுவை தீவு, பாலைதீவு என பல தீவுகள் உள்ளன. இந்தத் தீவுகளைப் பற்றிக் கேள்விப்படவில்லையா?

▲ இல்லை அங்கெல்லாம் இனித்தான் போகவேணும். இப்போ உங்களின் ஊரைச்சுற்றிப் பார்ப்போமா?

● பருந்தாரே! இந்த மதிலைப் பற்றிச் சொல்கிறேன். எனது ஊர் கற்கள் நிறைந்த பூமி. நிலத்திலிருந்து கற்களைக் கிளறி எடுப்பார்கள். அவற்றை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்து அடுக்குவார்கள். அவ்வளவுதான் அழகான மதிலாகி விடும்.

▲ புதுமையாகத்தான் இருக்கிறது.

● அதோ அந்தப் பெரிய மரத்தைப் பாருங்கள். அதிசயமாக இருக்கும்.

▲ இது என்ன குகையா?

● இல்லை மரத்தின் அடிப்பகுதி. இதில் வீடு போல பாதுகாப்பாக நாம் இருக்கலாம்.

▲ (மரத்தைச் சுற்றிப் பார்க்கிறது) நான் இப்படிபட்ட மரத்தைக் கண்டதே இல்லை. அது என்ன? உயரத்தில் கூடு தெரிகிறது?

● அதுவா? பழையகாலத்தில் புறாக்கள்தான் செய்திகளைக் கொண்டு சென்றன. அவை இருந்த கூடு இதுதான். புறாக்கள் இப்போதும் அதற்குள் இருக்கின்றன.

▲ அதோ பெரிய மனிதனின் காலடி போலத் தெரிகிறதே. இவ்வளவு பெரிய மனிதன் இருந்தானா?

● இராட்சத மனிதன் வாழ்ந்தான் எனச் சொல்லப்படுகிறது. அனுமானின் காலடி என்றும் கூறுகிறார்கள்.

▲ அதோ கூட்டம் கூட்டமாக நிற்கின்றவை கழுதைகளா?

● இல்லை. அவை குதிரைகள்.



▲ இயற்கை அழகு நிறைந்த ஊர். பார்க்க நிறைய உள்ளன. நான் எனது குடும்பத்தைக் கூட்டி கொண்டு வரப்போகிறேன்.

● அதோ உல்லாசப் பிரயாணிகள் வருகிறார்கள். அருகில் வாருங்கோ. எங்கள் இருவரையும் படம் எடுக்கட்டும். (பருந்தும் கிளியும் சேர்ந்து இருக்கின்றன.)

## சொல்அறிமுகம்

| | | |
|---|---|---|
| குதிரை | - | අශ්වයා |
| மதில் | - | තාප්පය |
| குகை | - | ගුහාව |
| புறாக்கூடு | - | පරෙවි කූඩුව |
| காலடி | - | අඩි සලකුණ |
| இராட்சத மனிதன் | - | රකුසු මිනිසා |
| அனுமான் | - | හනුමා |
| அதிசயம் | - | පුදුමය |
| தீவு | - | දූපත |
| பருந்து | - | උකුස්සා |

## செயற்பாடு 1

40

**பின்வருவன சரியாயின் (✓) எனவும் பிழையெனவும் (✗) எனவும் அடையாளமிடுவோம்.**

1. நெடுந்தீவு அழகான சிறிய ஊர்.
2. தீவு என்பது மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டது.
3. பழைய காலத்தில் புறாக்கள் செய்திகளைக் கொண்டு சென்றன.

## செயற்பாடு 2

40

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**

1. கிளியின் ஊரின் பெயர் என்ன?
2. தீவு என்றால் என்ன?
3. இரண்டு தீவுகளின் பெயர்களைத் தருக.
4. செய்திகளைக் கொண்டு செல்லும் பறவை எது?

## செயற்பாடு 3

**படங்களுக்குப் பொருத்தமான முறையில் இலக்கமிட்டுத் தொடர்புபடுத்துவோம்.**













| | | | | | |
|---|---|---|---|---|---|
| புறாக் கூடு இருக்கிறது. | 4 | கற்களால் அடுக்கிய மதில் | 6 | குதிரைகள் நிறைய இருக்கின்றன. | 1 |
| இராட்சத மனிதனின் காலடி உள்ளது. | 2 | பெரிய மரத்தின் அடியில் குகை போல உள்ளது. | 3 | பழைய காலத்துக் கோட்டை இருக்கிறது. | 5 |

## செயற்பாடு 4

**பின்வரும் பன்மைச் சொற்களுக்குப் பொருத்தமான ஒருமைச் சொற்களை எழுதுவோம்.**

| பன்மை | ஒருமை |
|---|---|
| நாம் | ______________ |
| குதிரைகள் | ______________ |
| உல்லாசப்பிரயாணிகள் | ______________ |
| வரவேற்போம் | ______________ |
| பார்ப்போம் | ______________ |
| அடுக்குவார்கள் | ______________ |

## செயற்பாடு 5

**எதிர்க் கருத்துச் சொற்களை எழுதுவோம்.**

| சிறுமை, பள்ளம், பழைமை, செயற்கை, குறைய | |
|---|---|
| 1. புதுமை | பழைமை |
| 2. இயற்கை | ______________ |
| 3. பெருமை | ______________ |
| 4. உயரம் | ______________ |
| 5. நிறைய | ______________ |

## செயற்பாடு 6

**பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புவோம்.**

1. ஒரு கூடு ______________ இருக்கிறது.
   (உயரத்தில், பள்ளத்தில், நிலத்தில்)

2. இராட்சத மனிதனின் காலடி ______________
   (சிறியது, அழகானது, பெரியது)

3. மரத்தில் ______________ பகுதியில் குகைபோலத் தெரிகிறது.
   (மேல், நடு, அடி)

4. ______________ கூட்டமாக நிற்கின்றன.
   (புறாக்கள், கழுதைகள், குதிரைகள்)

5. நெடுந்தீவு ______________ நிறைந்த பூமி.
   (மரங்கள், கற்கள், பறவைகள்)

## செயற்பாடு 7

**பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை எழுதி கருத்துள்ள பந்தியாக மாற்றுவோம்.**

**இன, பள்ளிவாசல்கள், அழகு, விவசாயம், வடக்கு, யாழ்ப்பாணம்**

எனது ஊர் ______________ அது ______________ மாகாணத்தில் உள்ளது. இது இயற்கை ______________ நிறைந்தது. இங்கு பல ______________ மக்கள் வாழ்கிறார்கள். இங்கே கோயில்கள், விகாரைகள், தேவாலயங்கள் ______________ உள்ளன. இங்குள்ள மக்களின் பிரதான தொழில் ______________

## செயற்பாடு 8

**பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி எனது ஊர் பற்றி ஒரு பந்தி எழுதுவோம்.**

| | | |
|---|---|---|
| பாடசாலை | இயற்கை | பொழுதுபோக்கு |
| வாழ்கிறார்கள் | ஒற்றுமை | வயல்கள் |
| கோயில் | அமைதி | உணவு |
| | விருப்பம் | |
| விவசாயம் | அழகானவீடுகள் | மரங்கள் |

## செயற்பாடு 9

‘‘எமது ஊர்’’ பற்றிய தகவல்கள் கொண்ட படங்களைச் சேகரிப்போம். ஊரைப் பற்றிப் பேசுவோம்.



# செவிமடுப்போம் உச்சரிப்போம்



41

| | |
|---|---|
| வருபவர்கள் | அடிப்பகுதி |
| வரவேற்போம் | அழகானவீடுகள் |
| பிரபலம் | உபசரிக்கிறாய் |
| பிரயாணி | பழையகாலம் |
| நண்பர்கள் | உல்லாசப் பிரயாணிகள் |
| பருந்து | கழுதைக் கூட்டம் |
| பாதுகாப்பு | |



## දැන් මට පුළුවන්

| | ✓ ලකුණු කරන්න | | |
|---|---|---|---|
| | ඉතා හොඳයි | හොඳයි | සාමාන්‍යයි |
| 1. සංවාදයකට සවන් දී තේරුම් ගැනීම | | | |
| 2. ඒකවචන බහුවචනයෙන් ලිවීම | | | |
| 3. මෙම පාඩමේ යෙදෙන වචනවලට සවන් දී උච්චාරණය කිරීම | | | |